பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 25 திங்கட்கிழமை (08.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :162

# ஆலயத்தில் தங்கிய 8 இளைஞர்கள் கொல்லப்பட்டு சடலங்கள் மறைப்பு!

## இரத்தக் கறைகளுடன் ஆடைகள் மீட்பு மந்துவிலில் நள்ளிரவில் பயங்கரம்

யாழ்ப்பாணம்,மே8

மந்துவில் கேலத்தை அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இரவு தங்கி இருந்த இளைஞர்கள் எட்டுப் பேர் காணமற்போயிருக்கின்றனர். இவர்கள் இரவோடு இரவாகக் கொலைசெய்யப்பட்டு சடலங்கள் மறைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. இரத்தக் கறைகள்,இரத்தம் தோய்ந்த ஆடைகள் மற்றும் அடையாள அட்டைகள் என்பன ஆலயப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கொடூரச் சம்பவம் மந்துவில் பிரதேச மக்களைப் பதைபதைக்கச் செய்துள்ளது. காணாமற்போன தங்கள் உறவுகளைத் தேடும் முயற்சியில் பிரதேச மக்கள் கொதிப்புடன் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

சாவகச்சேரி நகரில் இருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மந்துவில் கிழக்கில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சனிக்கிழமை இரவு இவர்கள் தங்கியிருந்தார்கள் என்று கூறப்படும் ஆலயத்தில் இருந்து இரத்த தடயங்களும் ஆடைகளின் பாகங்களும் 3 அடையாள அட்டைகளும் குறைந்தது 6 வெற்றுத் தோட்டாக்களும் பொதுமக்களால் கண்டெடுக்கப்பட்டன.

இதனை அடுத்து, கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் அந்த இளைஞர்களின் சடலங்களை அந்த ஊரவர்கள் தீவிரமாகத் தேடி வருகின்றனர். நேற்று மாலை வரை சடலங்கள் மீட்கப்படவில்லை.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் திடீரென ஊரடங்கு!

யாழ்ப்பாணம்,மே8

குடாநாட்டில் நேற்று நள்ளிரவு 12 மணி தொடக்கம் ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்று பிற்பகல் 4 மணிவரை ஊரடங்கு அமுலில் இருக்கும் என்று யாழ்.பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

சட்டத்தையும் சமாதானத்தையும் பேணுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் இந்த ஊரடங்கு வேளையில் மக்கள் வெளியே நடமாடாமல் வீடுகளில் தங்கியிருந்து பாதுகாப்புப் படையினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் கேட்டிருக்கிறது.

படையினர் திடீரென அமுல் செய்திருக்கும் ஊரடங்கு காரணமாக குடாநாட்டில் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டிருக்கின்றது.

பெருந்தேடுதல் நடவடிக்கை எதிலும் படையினர் ஈடுபடக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை -

தென்மராட்சி மந்துவில் பகுதியில் கேலத்தை அம்மன் ஆலயத்தில் உற்சவ ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக இரவுவேளை தங்கியிருந்த சமயம் எட்டு இளைஞர்கள்

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான சகல பாதைகளும் மூடப்பட்டன

கிளிநொச்சி,மே8

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்லும் சகல நுழைவாயில்களும் நேற்று மூடப்பட்டன.

முகமாலை, புளியங்குளம், மடு ,உயிலங்குளம், ஆகிய நுழைவாயில்களே மூடப்பட்டிருக்கின்றன.

இந்த நுழைவாயில்களில் அமைந்துள்ள சோதனை நிலையங்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரசன்னம் இருக்கவில்லை.

இதன் காரணமாக் போக்குவரத்துகள் யாவும் தடைப்பட்டுள்ளன. (ஐ)(22)

## திருநெல்வேலியில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,மே8

திருநெல்வேலி சந்திக்கருகில் நேற்று மாலை 5.50 மணியளவில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் நீர்வேலி கரந்தன் பகுதியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சாந்தருவான் கிரிசாந்த (வயது 25) என்பவர் கொல்லப்பட்டார்.

மதுபான விற்பனையாளரான இவர்,

(08 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் துப்பாக்கிச் சமர்

மந்திகைக்கும் மாலு சந்திக்குமிடையே தெருமூடி மடம் பகுதியில் இன்று அதிகாலை 3.15 மணியளவில் துப்பாக்கிச் சமர் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

ரோந்து வந்த படையினருக்கும் அப்பகுதியில் நடமாடிய சிலருக்குமிடையே துப்பாக்கிச் சமர் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இதில் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்துத் தகவலறிய முடியவில்லை. (22)

## தமிழ்க்கூட்டமைப்பு எம்.பிக்கள் அகாஷியுடன் கொழும்பில் பேச்சு

### 'உதயன்' தாக்குதல் சம்பவம் குறித்தும் பிரஸ்தாபிப்பு

கொழும்பு,மே8

தமிழர் தாயகப் பகுதிகளில் அரச படைகளும் துணை ஆயுதக்குழுக்களும் புரிந்து வரும் வன்செயல்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷியிடம் விலாவாரியாக எடுத்து விளக்கினர்.

'உதயன் - சஞ்சீவி' பத்திரிகை நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல் குறித்தும் அப்போது அகாஷியிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாஷி கொழும்பில் அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்து வருகிறார்.

நேற்றுப் பிற்பகல் அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராஜா, ந.ரவிராஜ், செ.கஜேந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

ஜெனீவாப் பேச்சுக்குப் பின்னர் வடக்கு -

(08 ஆம் பக்கம் பார்க்க)

## அகாஷி நாளை வன்னி சென்று தமிழ்ச்செல்வனைச் சந்திக்கிறார்

இலங்கையில் உருவாகியுள்ள நெருக்கடி நிலைமையைத் தணிப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாக ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதர் யசூசி அகாஷி விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தவிருக்கின்றார்.

நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சியில் இச்சந்திப்பு இடம் பெறும்.

கொழும்பு வந்துசேர்ந்த அகாஷி ஜனாதிபதி மற்றும் அரசுப்பிரதிநிதிகள், எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் உட்படப் பலரைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

தற்போது உருவாகியுள்ள நெருக்கடி நிலை குறித்து டோக்கியோவில் விரைவில் கூட்டப்படவுள்ள இணைத் தலைமை நாடுகளின் அடுத்த கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. அரசு - விடுதலைப் புலிகளின நிலைப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கெற்பேலியில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம்,மே8

கொடிகாமம் கெற்பேலி பகுதியில் இளைஞர் ஒருவர் படையினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார் என்று கூறப்படுகிறது.

கந்தையா கேதீஸ்வரன் என்ற 35 வயதான இந்த இளைஞர் அண்மையில் கட்டுத்துவக்கு வெடித்து காலில் காயமடைந்திருந்தார் என்று கூறப்படுகிறது.

சூட்டுகாயம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே படையினர் இவரைக் கைதுசெய்திருக்கின்றனர் என்று கூறப்பட்டது. (ஐ)(22)

## புலிகள் மீண்டும் பேச்சுக்குத் திரும்ப ஜப்பான் அழுத்தம் தர வேண்டும்

### விசேட தூதர் அகாஷியிடம் அரசுத்தரப்பு வேண்டுகோள்

கொழும்பு,மே8

விடுதலைப் புலிகள் மீண்டும் அமைதிப் பேச்சுகளுக்குத் திரும்புவதற்காக ஜப்பான் முழுமையான அழுத்தமொன்றைப் பிரயோகிக்கவேண்டுமென அரசாங்கம் நேற்று கோரியிருக்கிறது.

இலங்கை

ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி நேற்று அரச சமாதன செயலகத்தின் பணிப்பாளர் கலாநிதி பாலித கோஹென்னவை சந்தித்துப் பேச்சுநடத்தினார்.

இதன்போதே மேற்படி கோரிக்கையை அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர்

அமைதிப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும், ஆனாலும் விடுதலைப் புலிகள் இவற்றைத் தொடர்ந்து தட்டிக்கழித்து வருவதாகவும் நேற்றைய இந்தச் சந்திப்பின்போது குற்றஞ்சாட்டிய அரச சமாதான செயலகப்

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



'உதயன்' பணிமனை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த சந்தைப்படுத்தல் முகாமையாளர் பஸ்ரியன் ஜோர்ஜ் சகாயதாஸின் (சுரேஸ்) பூதவுடல் நல்லடக்கம் நேற்று முன்தினமும், விநியோகப்பகுதி ஊழியர் இராசரத்தினம் ரஞ்ஜித்குமாரின் (ரஞ்ஜித்) இறுதிக்கிரியைகள் கடந்த வியாழக்கிழமையன்றும் நடைபெற்றன. இவற்றின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. சந்தைப்படுத்தும் முகாமையாளர் சுரேஸின் பூதவுடல் யாழ். அடைக்கலமாதா கோயிலில் நடைபெற்ற திருப்பலி பூசைகளுக்கென தாங்கிச் செல்லப்படுவதையும் யாழ். ஆசனக்கோயில் சேமக்காலையில் நடைபெற்ற நல்லடக்கத்தின் போது அவரது துனைவியார் மலர் தூவி அஞ்சலி செய்வதையும், முதலிரு படங்களில் காணலாம். விநியோகப் பகுதி ஊழியர் ரஞ்ஜித்தின் உடலையும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள இரண்டு படங்க்ளிலும் காணலாம்.

# 'உதயன்' மீதான தாக்குதல் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை அவசியம்

## திருமலை தமிழ் மக்கள் பேரவை ஜனாதிபதியிடம் வலியுறுத்து

'உதயன்' பத்திரிகை அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து பக்கச் சார்பற்ற விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளை தண்டிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்றதிலிருந்து வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவை என்ன? அவர் சிங்கள மக்களை வாழவைத்து வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களை அழிக்க கங்கணம் கட்டிவிட்டார் போலத் தென்படுகிறது.

மாமனிதர் வ.விக்கினேஸ்வரன் மறைந்த அன்றிலிருந்து இன்றுவரை எமது வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்குப் பல இன்னல்களைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள்.

யாழ். நகரில் பல இளைஞர்கள் இரவு வேளைகளில் கடத்தப்படுகிறார்கள். பகல் வேளைகளில் கடத்தப்பட்டுக் கொலைசெய்யப்படுகிறார்கள். அத்துடன் இனவெறியர்களான அரச படையினர் மக்களைப் பல வழிகளில் துன்புறுத்துகிறார்கள். மட்டக்களப்பிலும், வவுனியாவிலும் இதேபோன்ற சம்பவங்கள் நடக்கின்றன.

யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள போது யார் முதலில் தாக்குதல் நடத்த உத்தரவிட்டார்கள்? கோதபாய ராஜபக்ஷவா? கொட்டதெனியாவா? அல்லது ஜனாதிபதியா? அப்படி இவர்களின் அனுமதியில்லாமல் படைத்தரப்பினர் தன்னிச்சையாகச் செயல்பட்டிருந்தால் அவர்களுக்கெதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

சர்வதேச சுதந்திர ஊடகவியலாளர்களுக்கு விருந்துபசாரம் நிகழும் அதேவேளை, உதயன் பத்திரிகைக் காரியாலயத்தை இனவெறியாளர்கள் தாக்கியிருக்கிறார்கள். இருவரைக் கொன்றதுடன் பலரைக் காயப்படுத்தியிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தை தமிழ் மக்கள் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த விடயத்தில் பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்களை மட்டும் வாழவைத்துக் கொண்டு தமிழ் மக்களை அழிப்பதற்கு ஜனாதிபதி கங்கணம் கட்டி நிற்கிறார் போலவே தெரிகிறது. (த)

## பனிப்புலம் தபாலகத்தை இடமாற்றக் கோரிக்கை

வலி. தென்மேற்கு.மே8

பனிப்புலம் உபதபால் நிலையத்தை பொது மக்களின் வசதியை முன்னிட்டு பனிப்புலம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு சமீபமாகவுள்ள கட்டடமொன்றுக்கு இடமாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பனிப்புலம் கிராம அபிவிருத்தி சங்கம் தபால் திணைக்களத்திடம் கடித மூலம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

தற்போது இந்த உபதபால் நிலையம் இயங்கி வரும் இடம் கிராம மக்களுக்கு மிகவும் வசதியற்ற இடமாக இருந்து வருவதால் மேற்படி ஆலயத்திற்கு சமீபமாக இதனை இடமாற்றம் செய்து தருமாறு மேற்படி சங்கம் பண்டத்தரிப்பு தபால் அலுவலக தபால் அதிபருக்கு ஊடாக வட பிராந்திய பிரதி அஞ்சல் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளது. (135)

# சடலத்தை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை



அடையாளம் காட்டி உதவுமாறும் - அவர் கேட்டுள்ளார். (29)

சங்கானை, மே8

சுதுமலையில் பொது மக்களின் தாக்குதலுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தவரின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு மானிப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த பொது மக்களிடம் கோரியுள்ளார்.

குறிப்பிட்ட நபர் 40 முதல் 45 வயதுக்கு இடைப்பட்டவர். முன்பக்கம் வழுக்கை விழுந்ததலை, கறுப்பு ரீசேட், கறுப்பு அரைக் காற்சட்டை அணிந்துள்ளார் என்றும் -

யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் உள்ள குறிப்பிட்ட நபரின் சடலத்தை

# கிட்டுவின் ஓவியங்களின் தொகுப்பு நூல் வெளியீடு

கிளிநொச்சி, மே8

மூத்த தளபதி கேணல் கிட்டுவின் ஓவியங்களின் கையடக்கத் தொகுப்பு வெளியீடும் ஓவியக்காட்சி ஆரம்ப நிகழ்வும் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கிளி. நுண்கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் மூத்த தளபதி கேணல் கிட்டுவினால் வரையப்பட்ட ஓவியங்களின் படங்கள் பொறிக்கப்பட்ட கையடக்கத் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டவுள்ளது.

தொடர்ந்து இளம் ஓவியர் சோ.சி.கலைக்கதிரின் ஓவியக்காட்சி ஆரம்பித்து வைக்கப்படும்.

இன்றும் நாளையும் இந்த ஓவியக்காட்சி இடம்பெறும். நுண்கலைக் கல்லூரியில் ஓவியர் கிட்டுவின் ஓவிய கையடக்கத் தொகுப்பினைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று நுண்கலைப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## கல்விக் கல்லூரியில் பயிற்சி முடித்தவர்களுக்கு உடனடியாக நியமனம்

அச்சுவேலி,மே8

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சியை முடித்து வெளியேறியவர்களுக்கு கொழும்பு கல்வி அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உடனடியாக தமக்குரிய பாடசாலைகளில் கடமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு வசதியாக நேர்முகப் பரீட்சையில் வைத்தே நியமனக் கடிதங்கள் வழங் கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.(11)

# கல்விக் கல்லூரியில் திறமைச் சித்திபெற்ற ஆசிரியர்களுக்கு முஸ்லிம் பாடசாலைகளில் நியமனம் வழங்குவதற்கு எதிர்ப்பு

## தமிழர் ஆசிரியர் சங்கம் பலத்த கண்டனம் தெரிவிப்பு

அச்சுவேலி,மே8

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி முடித்து திறமைச் சித்திபெற்ற ஆசிரியர்களுக்கு தென்னிலங்கையில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைப்பின் செயலாளரிடம் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் வழங்கப்பட்ட பயிற்சிகளின் போது திறமைச் சித்திபெற்றவர்களை தேசிய கல்லூரிகளுக்கு நியமிப்பது என்ற விதியைப் பயன்படுத்தி வட பகுதி உள்ளிட்ட நாட்டில் பல்வேறு பகுதியையும் சேர்ந்த தமிழ் ஆசிரியர்களுக்கு தென்னிலங்கையில் உள்ள முஸ்லிம் தேசியப் பாடசாலைகளில் நியமனம் வழங்கப்படுகின்றது.பெண்கள், அந்தணர்கள் உட்பட பலரும் வேறுபாடு இன்றி முஸ்லிம் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். இது குறித்து தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் புகார் செய்யப்பட்டது. இதனை அடுத்து தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர், சங்கத்தின் அதிருப்தியைத் தெரிவித்து கல்வி அமைச்சின் செயலாளருக்கும் தேசிய கல்லூரிகளின் தமிழ்ப்பிரிவு பணிப்பாளருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார்.

சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் சி.சரவணபவானந்தன் கல்வி அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்:

நாட்டின் நிலைமையக் கருத்தில் கொள்ளாமலும், தமிழ், முஸ்லிம் இனங்களிடையே முரண்பாட்டை தோற்றுவிக்கும் விதத்திலும் தென்னிலங்கையில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு வடக்கு - கிழக்கு பகுதியைச் சேர்ந்த தமிழ்ப் பெண்கள் மற்றும் அந்தணர்கள் நியமிக்கப்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

சம்பந்தப்பட்டவர்கள் வசிக்கும் பிரதேசங்களில் வெற்றிடம் நிலவும்போது வேறு பிரதேச பாடசாலைகளுக்கு நியமிப்பது சங்கத்திற்கு முன்னர் அளிக்கப்பட்ட வாக்குறுதியை மீறும் செயல் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு தென்னிலங்கை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட நியமனங்களை இரத்துச்செய்து அவர்களின் சொந்த மாவட்ட பாடசாலைகளுக்கு நியமனம் வழங்குமாறும கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (11)

## முல்லை. ஆஸ்பத்திரியில் இன்று பற் சிகிச்சை முகாம்

தமிழீழ சுகாதார சேவைகளின் நடமாடும் பற்சுகாதாரப்பிரிவினாரால் இன்று முல்லை. மாவட்ட வைத்தியசாலையில் பற்சிகிச்சை நடத்தப்படவுள்ளது.

பற்சுகாதாரக் குறைபாடுள்ள அனைவரையும் இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு தமிழீழ சுகாதார சேவைகளின் பற்சிகிச்சைப் பிரிவுப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

# வலி. தென் மேற்கில் பரவலாக பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு

வலி. தென்மேற்கு, மே8

வலி. தென்மேற்கு பகுதியில் பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்பிரிவிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றோல் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரசாங்க ஊழியர்கள் மற்றும் ஆஸ்பத்திரி போன்ற அத்தியாவசிய தேவைகளில் பணிபுரிவோரின் மோட்டார் சைக்கிள்களுக்கு பெற்றோல் வழங்க எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று கருத்து தெரிவிக்கப்படுகின்றது. (135)

## பண்டத்தரிப்பு பற்றிமா தேவாலய உற்சவம் ஆரம்பம்

வலி.மேற்கு,மே8

பண்டத்தரிப்பு பற்றிமா மாதா ஆலய (யாத்திரை திருத்தலம்) வருடாந்த உற்சவம் கடந்த 04 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணை திருவிழா நடைபெறும்.

13 ஆம் திகதி சனிக்கிழமை காலை ஆறு மணிக்கு முதல் திருப்பலியும், காலை ஏழு மணிக்கு திருநாள் திருப்பலியும், மாலை 4.30 மணிக்கு மூன்றாம் திருப்பலியும் நடைபெறவுள்ளன.

யாழ்.மாவட்ட ஆயர். அதிவண. தோமஸ் சவுந்திர நாயகம் ஆண்டகை திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார். (135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# அதிகரிக்கும் நெருக்கடி!

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வன்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. பேச்சுக் கான புறச்சூழல் தற்போதைக்கு ஏற்படக் கூடிய சாத்தியம் அற்று வருகிறது.

புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை அலுவலகமும், மகளிர் அரசியல் துறையினரின் அலுவலகமும் படையினரால் உடைக்கப்பட்டிருப் பது யாழ். மாவட்டத்தில் உருவாகியுள்ள தற் போதைய நெருக்கடியான நிலைமையைப் படை யினர் எப்படிக் கையாளப் போகிறார்கள் என்பதற்கு ஓர் ஆபத்தான சமிக்ஞை ஆகும்.

படையினர் மீது தாக்குதல் நடத்தப்படும் சமயம் படையினர் பதில் தாக்குதல் நடத்துவதும் அப்பா விப் பொது மக்கள் கொல்லப்படுவதும் அதிகரித்து வருகிறது. பதில் தாக்குதல் நடத்தும் ஆணையை முப்படையினருக்கும் ஜனாதிபதி பிறப்பிக்க வேண்டும் என்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப் பினரும், சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப் பானவருமான விஜத ஹேரத் கேட்டிருக்கிறார். படையினர் இதனைத்தான் தற்பொழுது செய்து அப்பாவிகளின் உயிர்களைப் பலியெடுத்து வரு கிறார்கள்.

தற்போது, ஜெனீவாவில் இரண்டாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்தக் கூடிய எந்த விதமான சாதக சூழ்நிலையும் கிடையாது. பேச்சுக்கான புறச் சூழல் ஏற்பட வேண்டும். அதற்கு முன்னர் கிழக்கிலிருந்து புலிகளின் தளபதிகளும், பொறுப்பாளர்களும் வன்னி சென்று தமது தலைமையுடன் ஆலோசனை நடத்துவதில் இருந்து வரும் பயணக் கெடுபிடிகள் நீக்கப்பட வேண்டும்.

அரசு தற்பொழுது கடல் விமானம் மூலம் புலிக ளின் தளபதிகளும், பொறுப்பாளர்களும் வன்னி செல்லலாம் என்று தெரிவித்துள்ளது. ஆனால், இந் த ஏற்பாட்டிலும் அரசு இன்றும் தெளிவாக இல்லை. புலிகள் இதுவரை பதில் அளிக்காததற்கு இதுதான் காரணம்.

புலிகளின் போக்குவரத்துப் பிரச்சினையில் அரசாங்கம் மிகவும் தெளிவாக செயற்பட வேண் டும். இதனை விட்டு விட்டு பேச்சு, பேச்சு என்று கூறிக்கொண்டிருப்பது வெளிநாடுகளை ஏமாற்று வதற்கே.

பேச்சில் இருந்து இரு தரப்பினரும் விலகிச் செல்ல முடியாது என்று பிரதமர் ரட்ணசிறி விக் கிரமநாயக்க கூறியிருப்பதும் இத்தகைய ஏமாற்று வேலைகளில் ஒன்றுதான்.

ஜெனீவாவில் நடைபெற்ற முதலாவது சுற்றுப் பேச்சில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை செயற்படுத்துவதில் அரசுக்கு சிறிதும் அக்கறை இல்லை. ஒட்டுக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஒட்டுக்குழுக்களுக்கு மேலும் உற்சாகம் அளிக்கும் செயற்பாடுகளே முதலாவது சுற்றுப் பேச்சுக்களின் பின்பு அரங் கேறி இருக்கின்றன.

முதலாவது சுற்றுப் பேச்சுக்களின் பின்பு நிலைமை இவ்வளவு மோசமடைந்ததற்கு ஒட்டுக்குழுக்கள் தான் காரணம். ஒட்டுக் குழுக்கள் தமது கட்டுப் பாட்டுப் பகுதியில் இல்லை என்று படையினர் கைவிரித்து விட்டார்கள். ஆகவே, ஒட்டுக்குழுக் கள் மூலம் தாக்குதல்கள் தொடரத்தான் போகின்றன.

படுகொலைகள் தொடர்ந்தால் பேச்சுக்கே இட மில்லை என்று 'ஹிந்துஸ்தான் டைம்' பத்திரி கைக்கு அளித்த பேட்டியில் தயா மாஸ்டர் தெளி வாகத் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தினமும் நடைபெறும் சம் பவங்களை நோக்கும்போது வன்செயல்கள் கட்டுப் பாட்டை இழந்துவிட்டன என்றே எண்ணத் தோன்று கின்றது. 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் ஏற்படு வதற்கு முன்னர் இருந்ததை விட நிலைமை மோசமடைந்து விட்டது.

மீண்டும் யுத்தம் மூளுவதால் ஏற்படக் கூடிய விளைவுகளைப் புரிந்துகொள்ள முடியாத அள வுக்கு பேரினவாதிகளால் மூளைச் சலவை செய்யப் பட்டு விட்டார் மஹிந்தர்.

மஹிந்தர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று பதவி ஏற்ற போதே கடும் போக்காளர்களை யும், இனவாதிகளையும் உயர் பதவிகளில் நிய மித்து யுத்தத்துக்கான அடித்தளத்தைப் போட்டி ருந்தார். தற்பொழுது இடம்பெற்று வருபவை அதன் தொடர் செயற்பாடுகளே! ஆகவே, ஏற்படப் போகும் விளைவுகளுக்கு மஹிந்தரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

# ஆசிரியர்களுக்குரிய சம்பளம், பதவி உயர்வுகளை மாத இறுதிக்குள் வழங்க கல்வியமைச்சு பணிப்பு

அச்சுவேலி, மே 8

கடந்த வருடம் திருத்தி அமைக் கப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமா ணக் குறிப்பு 04/2005 இன் பிரகாரம், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய பதவி உயர்வுகள், சம்பள உயர்வுகள் தொடர்பான செயற்பாடுகளை இம் மாதம் 31ஆம் திகதிக்கு முன் வழங்கு வதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும் .

-இவ்வாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நேரடியாகப் பணிப் புரை வழங்கியுள்ளார்.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப்ப ணிப்பாளர்கள், வலயக் கல்வித் திணைக்கள கணக்காளர்கள், நிர்வாக அதிகாரிகள் உள்ளிட்ட உயர் அதிகாரி கள் மற்றும் இலங்கையில் உள்ள முன் னணி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் பன்னிரண்டின் பிரதிநிதிகள் ஆகி யோர் உள்ளடங்கிய கலந்துரையாடல் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத் தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்த கொண்ட கல்வி அமைச்சர் அதிகாரிகளுக்கு நேரடியாக இந்தப் பணிப்புரையை வழங்கினார்.

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசியருக்கான பதவி உயர்வுகள் சம் பள உயர்வுகள் உரிய முறையில் வழங் கப்படவில்லை என ஆசிரியர் தொ ழிற்சங்கங்கள் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்ததை அடுத்து இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட் டது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங் கத்தின் பிரதிநிதிகள் உட்பட பன்னி ரண்டு முன்னணித் தொழிற்சங்கங்க ளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். அமைச்சின் உயர் அதி காரிகள், கல்வி அமைச்சின் செயலா ளர்கள் ஆகியோரும் இதில் பங்கு பற்றினர்.

சம்பள மாற்றி அமைப்பு பதவி உயர்வுகள் வழங்கும் போது ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக செயல் முறை விளக்கங்களும் இதில் வழங் கப்பட்டன. (11)

# ஆஸ்திரேலிய செஞ்சிலுவைக் கிளை தனது பணிகளை நிறுத்தியது

நல்லூர், மே 8

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தின் யாழ். மாவட்டக் கிளையில் இயங்கி வந்த ஆஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங் கக் கிளை குடாநாட்டில் நிலவும் நெருக் கடி நிலையை அடுத்து தனது பணிகளை நிறுத்திக் கொண்டது.

இதனால் மேற்படி சங்கத்தினால் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் ஸ்தம்பி தமடைந்துள்ளன.

அத்துடன் இங்கு கடமையில் இருந்த வெளிநாட்டவர்கள் கிளை நட வடிக்கைகள் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து யாழ் நகரை விட்டு வெளியேறிவிட்ட னர்.

இந்த நிலையில் கிளையில் கடமை யாற்றிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊழியர்களின் நிலை என்ன என்பது கேள்விக்குரியதாகியுள்ளதாகக் கூறப் பட்டது.

(111)

# காலத்தின் தேவையறிந்து களமாடச் செல்வோம்!

## தென்மராட்சி சனசமூக நிலையங்களின் ஒன்றியம் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 8

காலத்தின் தேவையறிந்து களமாடச் செல்வோம். இதன் மூலமே விரைவில் எமக்கு விடுதலை கிடைக்கும்.

-இவ்வாறு தெரிவித்துள்ளது தென் மராட்சி சனசமூக நிலையங்களின் ஒன்றி யம்.

இது தொடர்பாக மேற்படி ஒன்றி யம் விடுத்துள்ள அறிக்கையில்,

நாம் தொடர்ந்தும் கோழைகளாக வும், பேதைகளாகவும் தாயக மண்ணில் வாழ முடியாது. தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் ஸ்ரீலங்கா ஆக்கிர மிப்புப் படைகளால் தமிழ் மக்கள் மிகக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டும், வெட்டியும், சுட்டும் மலிவாக தமிழர் உயிர்கள் நாள்தோறும் காவு கொள்ளும் துயரம் நிறைந்த பொழுதுகள் நீண்டு வருவதை நாம் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெறும் பதினைந்தாயிரம் தப்பியோடும் மனநிலையில் உள்ள ஸ்ரீலங்கா கூலிப் படையினரே உள்ளனர். இப்பிரதே சத்தில் மக்களோ, ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கின்ற போது நாம் ஒவ் வொருவரும் எதிரியைத் தாக்கத் துணிந்து விட்டால் அவன் உயிர் தப்பி ஓடுவதை விட வேறு எதனையும் அவனால் செய்ய முடியாது.

இந்த நிலையே குடாநாட்டின் சகல பகுதிகளையும் உள்ளடக்கியதாக இதே போன்ற மனநிலையில் வெறும் 45 ஆயிரம் ஸ்ரீலங்கா கூலிப்படையினரே இருக் கின்றனர். தமிழ் மக்களாகிய நாம் அவன் ஆக்கிரமித்து வைத்திருக்கின்ற எமது பூர்வீக நிலங்களைச் சூழ ஆறு இலட்சத்திற்கு அதிகமாக இருக்கின்றோம். இதில் இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் அடங்கியிருக்கின் றனர். எமது மக்களின் பலமோ அதி உச் சமானது.

புகைக்கும் எரிமலை போன்று விடு தலை வேண்டிக் கனன்று கொண்டிருக் கும் தமிழர்கள் தமது மூச்சுக்காற்றை எதிரியின் திசைபார்த்துத் திருப்புவார் கள் எனில் பெரும் சூறைக் காற்றில் பாறை களைப் புரட்டி எறியும் புயலாய் எதிரி முகாம்கள் பார்த்திருக்கச் சாம்பல் ஆவதை உலகின் எந்தச் சக்திகளாலும் தடுக்க முடியாது என்பதை எதிரிகள் மிக விரைவில் உணர வேண்டிய நிலை வந்து விட்டது.

மிகமிகக் குறுகிய நாள்களின் இடை வெளிக்குள் எமது பிரதேசத்தில் மட் டும் பதினைந்திற்கும் மேற்பட்ட அப் பாவிப் பொதுமக்கள் மிகக் கொடூர மாகப் படையினரால் சுட்டுப் படு கொலை செய்யப்பட்டிருப்பது எமது மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது டன், நூறு வரையான அப்பாவிப் பொதுமக்கள் குடாநாடு முழுவதும் மிகக் குறுகிய நாள்களில் ஸ்ரீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளினாலும், ஈ.பி. டி.பி. தேச விரோதிகளாலும் படு கொலைக்கு உள்ளாகி இருக்கின்றனர்.

இச்சம்பவங்கள் தமிழ் மக்களிடம் எதிரி களை முற்றாய் அழித்து எமது மண்ணை விரைவாய் மீட்க வேண்டும் என்ற உணர் வலையையும் ஒவ்வொரு தமிழனிடத் தில் எழுச்சியையும் உருவாக்கி இருப் பதுடன், சுதந்திரத்தின் தேவையையும் விடுதலையின் அவசியத்தையும் அதிகம் உணர வைத்துள்ளது.

தொடர்ந்தும் நெருக்கடி மிகுந்த ஓர் இக்கட்டான சூழலில் ஸ்ரீலங்காப் படை களின் அடக்குமுறைக்குள் அடங்கி வாழ முடியாது என்பதை மக்கள் அனைவ ரும் உணர்ந்து விட்டனர். ஆயுதம் தரித்த எதிரிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியே போராட வேண்டும் என்ற மனநிலையில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் பிரதேசம் எங்கும் வேகம் பெற்றுள்ளனர்- என்று அதில் உள்ளது.

# 'உதயன்' மீதான தாக்குதல் மிலேச்சத்தனமான செயல்

கொழும்பு,மே8

'உதயன்' மீதான தாக்குதல் மனித நேயத்துக்கு அப்பாற்பட்ட மிலேச்சத் தனமான செயல்.

இவ்வாறு தெரிவித்துள்ளது கோப் பாய் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம்.

இது தொடர்பாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்:-

பண்பாட்டின் மையமாகத் திகழும் யாழ்.மாவட்டத்தில் அண்மைக்கால மாக முலை முடுக்கெங்கும் அப்பாவி பொதுமக்கள் மீது மிகக் கொடூரமான - காடைத்தனம் மிகுந்த இனவெறியாட் டம் கட்டுக்கடங்காது நீண்டு செல் கிறது. இதன் உச்சமாக வயது வேறு பாடின்றி எமது உறவுகள் 7 பேர் நெல்லியடியில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன் உண்மைத் தன்மைகளையும், அராஜகக் கும்பல்களின் அட்டகாசங் களையும் மக்களின் துன்ப துயரங்க ளையும் உடனுக்குடன் வெளியிட்டு வரும் தனித்துவமான தமிழ் நாளிதழ் 'உதயன்'. இந்த நாளிதழ் அலுவலகத் தினுள் இரவு நேரம் புகுந்த காடையர் கும்பல் காட்டு மிராண்டித்தனமாக கடமையிலிருந்த அந்தப் பத்திரிகை நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகா மையாளரையும், விநியோகப்பகுதி ஊழியரையும் சுட்டுக்கொன்று விட்டு இரண்டு பணியாளர்ளை காயப்படுத்தி பெறுமதியான தொழில்நுட்பக்கருவி களையும் சேதப்படுத்தி விட்டு தப்பி யோடியுள்ளது.

இதனூடாக, சிங்கள தேசமும் அதன் கைக்கூலிகளும் எமது மக்களின் அவ லங்களையும் தங்கள் அராஜகங்க ளையும் வெளியுகிற்கு சென்றடை யாமல் தடுப்பதும் தமிழ் மக்களை அழிப்பதையும் இலக்காகக் கொண் டுள்ளனர்.

ஆனால், எம் மண்ணில் எதிரி கங் கணம் கட்டும் எந்தச் செயல்களுக்கும் அஞ்சாது ஓய்ந்து போகாது நிமிர்ந்து நின்று உழைப்பதுவே தமிழினத்தின் மரபாகும். எனவே, இவ்வாறான கோழைத்தனமான செயல்களைக் கண்டித்தும் -

அப்பாவிகள் மீதான படுகொலைகளை சர்வதேசத்திற்கு வெளிக்கொணரவும் எமது அன்றாட பணிகளை முடக்கி அரச, அரசசார்பற்ற, பொது அமைப்புக்கள், கல்விச் சாலைகள் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து எமது எதிர்ப்பையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தி நிற்போம் - என்று அதில் உள்ளது.

## நாளை

சித்திரை : 26
செவ்வாய்க்கிழமை
09.05.2006
திதி : ஏகாதசி
காலை 07.56
நட்சத்திரம் : உத்தராடம்
பிற்பகல் : 03.04
சுபநேரம் : 10.24 - 11.54
ராகுகாலம் : 02.54 - 04.24

## உதயவாக்கு

மற்றவர்களின் வடுக்கள் நமக் குப் பாடமாக அமையவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெற்பேலி கிராமம் அபிவிருத்திக்கு தெரிவு

கிராமவாழ்வாதார அமைச்சின் கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கெற்பேலி கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பிரதேச செயலகத்துறை அலுவலர்கள் இந்தக் கிராமத்திற்குச் சென்று அப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டியஅத்தியாவசிய வேலைத்திட்டங்களை இனங்கண்டு அமைச்சிற்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (117)

## அரச ஊழியர் போட்டிக்கு ஊர்காவற்றுறையிலிருந்து 45 ஊழியர்கள் ஆக்கம்

யாழ்ப்பாணம்,மே 8

அரச ஊழியர்களின் ஆக்கத்திறன் போட்டிகளுக்கென தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மூலம் 45 அரச அலுவர்களின் ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கவிதை, சிறுகதை, பாடல், சிறுவர் கதை, மொழிபெயர்ப்பு என்ற அடிப்படையில் அரச அலுவலர்களால் ஆக்கங்கள் சமர்ப்பிக்கப் பட்டிருந்தன.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை அலுவர்கள் மற்றும் பிரதேசப் பாடசாலைகளின் ஆசிரியர்கள் இந்த ஆக்கங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

மேற்படி அரச ஊழியர்களின் ஆக்கங்கள் அனைத்தும் கலாசார அலுவல்கள் மற்றும் தேசியமரபுரிமைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (16)

## நீங்காத நினைவில் ஓராண்டு



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14.05.1942 | 20.04.2005 |

### திருமதி சிவசுப்பிரமணியம் நல்லம்மா

(முன்னாள் நெசவு போதனாசிரியர்)

உத்தமத்தாயாய் உன்னத மனைவியாய்
மெத்தப் போற்றும் மேலான சோதரியாய்
முத்தான உத்தமியாய் முதன்மை பெற்று
நித்தமும் உன் நினைவில் நிற்கும்
நின்னைமறவா நினைவால் என்றும்
ஆண்டவன் அடியில் அமைதியாய் வாழ
நித்தம் நித்தம் அஞ்சலி செய்வோம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மயூரன் பலசரக்கு மாளிகை,
வழக்கம்பரை
சுழிபுரம்.

## வாழ்த்துகின்றோம்



இன்று 08.05.2006
அகவை அறுபதை
நிறைவு செய்யும் எங்கள்
ஆசானும், சாரணியப்
பொறுப்பாசிரியரும்,
கவிஞரும், எழுத்தாளரும்
ஆகிய
உயர் திரு.
**பாலகிருஷ்ணன் முத்துக்குமாரு**
அவர்களை
வாழத்துகின்றோம்.

இன்சொலாய்! இதயங் கசிந்த ஈரத்தாய்!
இறைவனை மறவா எண்ணத்தாய்!
நன்புசெய் நல்லா சிரியனென நாட்டிய
நற்றவ வாண்டுகள் முப்பதில்
இன்பமாய் இருபதை யாழிந்துவில் இணைத்தனை!
ஏந்தலே! முத்துக் குமாருவே!
அன்புளாய்! அகவை அறுபதை அடைந்தனை!
ஆனந்தமாய் நூறாண்டு கள்வாழி!

கல்விச் சமூகமும், நல்லூர் வாழ்
மக்களும்.

## காணவில்லை



சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்திற்குப் புத்தூர் - சாவகச்சேரி வீதியூடாக 24.04.2006ஆம் திகதி காலை 8 மணியளவில் சிவப்பு நிற **NP MC 0200 BOXER** மோட்டார் சைக்கிளில் கடமையின் நிமித்தம் பயணித்த எமது சங்கக் கிளைமுகாமையாளரான அச்சுவேலி வடக்கு, கதிரிப்பாயைச் சேர்ந்த

**நாகமுத்து சிறீபவன்**

என்பரை இன்றுவரை காணவில்லை.
இவர் தொடர்பான விவரம் தெரிந்தவர்கள் எமக்கு உடன் அறியத் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தலைவர்,
சாவகச்சேரி பனை தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம்,
டச்சுவீதி,சாவகச்சேரி.

(50045)

## கேள்வி அறிவித்தல்

### கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம்.

01. கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம் சார்பாக கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்)பிரதம பொறியியலாளரினால் 31.05.2006 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த விவரம் | இக்ராட் தரம் | கேள்விப் பிணை | மீளளிக்கப் படாதகட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01 | JF/BD/CE/JBIC/01/2006 | மத்திய மருந்தகம் நிர்மாணித்தல், மானிப்பாய் | M7 | 56,750.00 | 1,000.00 |
| 02 | JF/BD/CE/JBIC/02/2006 | மத்திய மருந்தகம் நிர்மாணித்தல், கரவெட்டி கட்டம் I | M7 | 53,500.00 | 1,000.00 |

02. கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல ஒப்பந்தகாரர்களும் கொண்டிருக்கவேண்டும்.
    (1) மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிட்ட ICTAD தரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    (2) ICTAD அறிவுறுத்தலுக்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வித் தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    (3) முன்னைய வேலைகளில் மோசமான, நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.
    (4) ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர் ஒப்படைக்கவேண்டும்.
    (5) கேள்விதாரர் (VAT) பதிவுசெய்ததன் பிரதியையோ அல்லது (VAT) பதிவு செய்யப்பட்டமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கவேண்டும்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக நிறைவேற்றுப் பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா) யாழ்ப்பாணம். (தொ.இல. 021 222 2634) பரிசீலிக்க முடியும்.
04. கேள்வி ஆவணங்களை 08.05.2006 தொடக்கம் 26.05.2006 பி.ப. 3.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கேள்வித் தொகை ரூபா 1,000.00 பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் செலுத்தி நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
05. மூடிய கேள்விகளை தலைவர், திணைக்கள கேள்விச்சபை, பிரதம பொறியியலாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம் (மாகாணம்), யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 31.05.2006 பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைப்பதுடன், உடனடியாக கேள்வி திறக்கப்படும் இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.
06. மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்தச் செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

*பிரதம பொறியியலாளர் அலுவலகம்,*
*கட்டடங்கள் திணைக்களம் (மா),*
*கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.*

(சி/49229)

[illegible]
*தலைவர், திணைக்கள கேள்விச்சபை/*
*பிரதம பொறியியலாளர், யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.02.1925 | 19.04.2005 |

### திருமதி செல்லமுத்து அன்னம்மா

திதி: 08.05.2006

பெற்றெடுத்து எம்மையெல்லாம்
பேணி வளர்த்தெடுத்து
அன்புகாட்டி ஆருயிராய் அரவணைத்து
அன்னைக்கு அன்னையாய் ஆருயிர்த்தந்தையாய்
எம்மைத் தாங்கி வழிநடத்திய
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இராச வீதி,
தோப்பு,
அச்சுவேலி.

(சி/49222)

குடும்பத்தினர்.



# "...திருமலையை ஏப்பம் விட துடிக்கிறது சிங்களம்..."

## 'உதயனு'க்கு வழங்கிய செவ்வியில் ஈழவேந்தன் எம்.பி. ஆவேசம்!

நோர்வேக்கு விசேட சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு திரும்பியுள்ளார் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன். அவர் அங்கு புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களையும், நோர்வேயின் தமிழர்கள் வாழும் பகுதிகளின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களையும் சந்தித்து இலங்கை இனப்பிரச்சினை மற்றும் சமாதான முன்னெடுப்புகள் குறித்து ஆழமான கலந்துரையாடல்களை நிகழ்த்தியுள்ளார்.

நட்பு ரீதியில் அமைந்த இந்த சுற்றுப் பயணம் பயனுள்ளதாக அமைந்ததாக ஈழவேந்தன் தெரிவித்தார். அவர் அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக 'உதயனு'க்கு செவ்வி வழங்கினார்.

சமீபகாலமாக திருகோணமலையில் இடம்பெற்றுவரும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்தும் அவர் கருத்துக் கூறினார்.

திருமலை தமிழர்களின் தலைநகர்; கோட்டை அதனைத் திட்டமிட்டு பறிப்பதற்கு சிங்களப் பேரின வாதிகள் சதித்திட்டம் தீட்டுகின்றன. அந்தச் சதி நடவடிக்கையின் பரிணாமங்களே திருமலையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள்" என்று உணர்ச்சி மேலிட கூறினார். ஈழவேந்தன்.

"என்னதான் இடர்கள் வந்தாலும் - துன்பங்கள் நேர்ந்தாலும் தமிழ் மக்களின் இருதயமாக விளங்குகின்ற திருகோணமலையைச் சிங்களவர்களிடம் பறிகொடுக்க இடமளியோம்; அதற்கு எதிராக இறுதிவரை குரல் கொடுப்போம்..." என்றும் ஈழவேந்தன் தெரிவித்தார். திருகோணமலை நிலைமைகள் தொடர்பாகவும், தனது நோர்வே பயணம் குறித்தும் அவர் வழங்கிய செவ்வியை இங்கு தருகின்றோம்.



இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதர் ஹன்சன் போவரை நோர்வேயில் சந்தித்தபோது.

**கேள்வி:-** புலம்பெயர்ந்து நோர்வேயில் வாழும் எமது மக்களது வாழ்க்கையைப் பார்த்தபோது என்ன உணர்ந்தீர்கள்?

**பதில்:-** உண்மையில் கனடா, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற ஏனைய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்களிலும் பார்க்க நோர்வே வாழ் தமிழர்கள் மொழிப்பற்று அதிகமுள்ளவர்களாக தெரிந்தார்கள்.

ஒரு இனத்தின் விடுதலையை ஏற்படுத்துவதில் மொழியின் பங்கு முக்கியமானது. மொழி அழிந்தும் வாழ்ந்தனர் பாலஸ்தீனர்கள். அது எமக்கு ஒரு பாடம். நாம் எமது மொழியை இழந்து விடவில்லை. நோர்வேயில் வாழும் தமிழ் மக்கள் அதிகமான மொழிப் பற்றுடன் கலாசார நிகழ்ச்சிகளையும், தமிழ் மொழிப் பாடசாலைகளையும் நடத்திவருகின்றனர்.

**கே:-** அங்கு வசிக்கும் தமிழ்ச் சிறார்கள் பாடசாலைகளில் நோர்வேக்குரிய மொழியையும், தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் மொழியையும் கற்றுக்கொள்வதை சிரமமாக கருதவில்லையா?

**ப:-** நான் கூட அப்படித்தான் நினைத்திருந்தேன். ஆனால், அவர்கள் அதற்கு மாறாக மொழி மீது ஆர்வம் காட்டி வருகின்றனர். பிள்ளைகள் தமிழ் படிக்க வேண்டும், தமிழில் கதைக்க வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர் மத்தியில் மிகவும் பெரிதாக இருக்கிறது.

அங்கு அன்னை பூபதி கலைக்கூடம் என்ற தமிழ்ப் பாடசாலை பதினாறு கிளைகளாக நோர்வேயின் பலபகுதிகளிலும் இயங்கி வருகிறது. இங்கு தமிழீழ கல்விக்கழகத்தின் பாடத்திட்டத்தின்படி வடிவமைக்கப்பட்ட பாடப்புத்தகங்களே கற்பிக்கப்பட்டு வருகின்றன.

இதனால் தமிழ்மொழியை மட்டுமல்ல, தமிழன் வரலாறு, பண்பாடு, தனித்தன்மைகளையும் அவர்கள் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது.

பொதுவாக நோர்வே மக்கள் தமது மொழியில் அதிக பற்றுக் கொண்டவர்கள். அங்கு தினசரியாக ஆங்கிலப் பத்திரிகை எதுவும் வெளிவருவதில்லை என அறிந்தேன். அந்தளவுக்கு அங்கு நோர்வே மொழி முக்கியப்படுத்தப்படுகிறது. அந்த நிலைமையே எம்மவர்களிடமும் இத்தகையதொரு நிலைமையை தோற்றுவித்திருக்கும் என நினைக்கிறேன்.

**கே:-** அப்படியானால், புலம்பெயர்ந்து நோர்வேயில் வாழும் எம்மவர்கள் நாட்டில் அமைதி தோன்றினால் மீண்டும் இங்குவந்து வாழ விரும்புகிறார்களா?

**ப:-** பெரும்பாலானோர் அப்படித்தான் விரும்புகின்றனர். அவர்கள் நாம் இருக்கிறோம் என்ற நம்பிக்கையில்தான் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாம் அரசியல் காப்புறுதிகளை வழங்குபவர்களாக இருக்கிறோம். அங்கு ஏறத்தாழ பன்னிரண்டாயிரம் தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் அனைவருமே தாயகக் கனவுகளுடன் தான் வாழ்ந்து வருகின்றனர்.

எமக்கான அரசியல் அமைப்பு உரிய முறையில் அமைக்கப்பட்டதும் அவர்கள் திரும்பவும் நாடுதிரும்பி வாழ வாய்ப்புகள் உள்ளன.

நாம் பாலஸ்தீனர்களைப் போல் இழந்த நாட்டுக்காக போராடாமல் நாம் இருக்கிற நாட்டை இழக்காது இருப்பதற்காக போராடுகிறோம். எமது போராட்டம் வெற்றிபெறும்.

**கே:-** நீங்கள் நோர்வேயில் அங்கிருக்கும் அரசியல் தலைவர்களையும், உள்ளூராட்சி மன்றத் தலைவர்களையும், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளீர்கள். அச்சந்திப்புகள் பற்றிக் கூறமுடியுமா?

**ப:-** அங்கு அரசியல்வாதிகள் மிகவும் இயல்பானவர்கள். எந்த ஆடம்பரமும் இல்லாமல் சாதாரணமாக மக்களுடன் மக்களாக வாழ்கின்றனர். உதாரணமாக மக்களுடன் வங்கிகளிலும், அலுவலகங்களிலும் வரிசையில் நிற்கிறார்கள்; சைக்கிளில் பயணிக்கிறார்கள்.

நான் தற்போது இலங்கையில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விசேட தூதுவர் ஜோன் ஹென்சன் பவர், எரிக் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே வெளிவிவகார அமைச்சைச் சார்ந்த றெய்மன் ஜோகன்சன், உள்ளூராட்சி மன்றத் தலைவரான பார்போ ஏ.பக்கின் உட்பட பலரைச் சந்தித்தேன். அதை விட ஒஸ்லோ பல்கலைக்கழக அரசியல் துறைப் பேராசிரியரான சல்டொக்கோ மற்றும் நோபல்பரிசு தெரிவுக்குழுவின் தலைவர் மியூர் உட்பட பல பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

செவ்வி கண்டவர்
**சிவசைலஜா**

**கே:-** நீங்கள் சந்தித்த நோர்வே அரசியல் பிரதிநிதிகள் இலங்கையில் நோர்வே மத்தியஸ்தம் வகித்துவரும் சமாதான நடவடிக்கைகள் பற்றி என்ன கருதுகின்றனர்?

**ப:-** அவர்கள் எமது நாட்டின் உண்மை நிலையை விளங்கிக் கொண்டுள்ளனர். அதுமட்டுமன்றி பாலஸ்தீன பிரச்சினைகளிலும், சமாதான நடவடிக்கைகளிலும் பங்கு பற்றிய அனுபவத்தைக் கொண்டவர்கள். இலங்கையில் சமாதானம் எட்டப்படும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

**கே:-** நீங்கள் நாட்டிலில்லாத சமயத்தில் திருமலை உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் பெரும் அழிவுகள் இடம்பெற்றுள்ளன. இது தொடர்பாக என்ன கருதுகிறீர்கள்?

**ப:-** உண்மையில் இது, திருமலையை தமிழர்களிடமிருந்து பறித்து விழுங்கி ஏப்பம் விடுவதற்கான சிங்களத்தின் முயற்சி.

அங்கு தமிழ்த் தேசியத்துக்காக உழைத்த விக்னேஸ்வரனை திட்டமிட்டே கொன்றுள்ளனர். மறுநாள் நாடாளுமன்ற உறுப்பினராக அறிவிக்கப்படுவதற்கு முதல் நாளே கொல்லப்பட்டுள்ளார். அவர் தேசியத்துக்காக உழைத்த ஒருவர். அவரது இழப்பு தமிழ்மக்களுக்குப் பேரிழப்பு.

அண்மையில் இராணுவத் தளபதி மீதான தாக்குதலைத் தொடர்ந்து திருமலையில் பெரியளவில் விமானத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதன்போது குழந்தைகளும், பெரியவர்களுமாக தமிழ்மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதுவும் திருமலையிலிருந்து தமிழர்களை விரட்டி தாம் நகரை சுவீகரிப்பதற்கான முயற்சியாகவே கொள்ளத்தக்கது.

ஆனால், நாம் திருமலையை விட்டுக் கொடுக்க தயாரில்லை. திருமலை எங்கள் தலைநகர்.

நான் அடிக்கடி இது தொடர்பாக கூறியுள்ளேன். தமிழர்கள் திருமலையில் முதலீடுகளைச் செய்யவேண்டும். எதிரிகளின் சிந்தனையை முறியடிக்க வேண்டும்.

---

# மக்கள் மீதான. படையினரின் வன்முறைகள் தமிழர் தன்னாட்சியையே வலுப்படுத்தும்!

## அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் கருத்து

இலங்கையில் தமிழர்கள் மீதான ஸ்ரீ லங்காப் படையினரது வன்முறைகள் தமிழர் தன்னாட்சியைத்தான் வலுப்படுத்தும் என்று அவுஸ்திரேலியா நாடாளுமன்ற உறுப்பினர் ஜோர்ன் மேர்பி தெரிவித்துள்ளார். இலங்கையில் தற்போது ஏற்பட்டிருக்கும் வன்முறைச் சம்வங்கள் யுத்த முனைப்புகள் என்பன குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீ லங்கா அரசாங்கத்துக்கும் இடையேயான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செயற்படுத்துவதன் மூலமே வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவரமுடியும்.

கடந்த ஏப்ரல் 25 மற்றும் 26ஆம் நாட்களில் ஸ்ரீ லங்கா படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். குறைந்த பட்சம் 15 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஸ்ரீ லங்கா இராணுவத் தளபதி மீதான தாக்குதலையடுத்தே தமிழ் மக்கள் மீது இத்தகைய பதிலடி நடவடிக்கைமேற்கொண்டதாக ஸ்ரீ லங்கா அரசாங்கம் தெரிவித்துள்ளது. அப்படியானால் தமிழர்களைதமதுநாட்டினது மக்களாக ஸ்ரீ லங்கா அரசாங்கம் கருதவில்லை என்றுதான் தோன்றுகின்றது. இத்தகைய தாக்குதல்களானவை தமிழர்களின் [illegible] உரிமைக் கோரிக்கையைத்தான் வலுப்படுத்தும்.

ஆழிப்பேரலையாலும் போரினாலும் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீரமைக்க இரு தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். இதற்கான ஏற்பாடுகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் உள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை அமுல்படுத்த வேண்டியது அவசியமாகும். அவுஸ்திரேலிய அரசாங்கமானது வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவர ஸ்ரீ லங்கா அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஸ்ரீ லங்கா [illegible] தமிழர்களது தலைமைப் பீடத்துடன் [illegible]களை நடத்தவேண்டும். - என்று அவர் குறிப்பிட்டார். (த)

---

# தேசிய போஷாக்கு மாதம் அரசினால் பிரகடனம்

மே மாதத்தை தேசிய போஷாக்கு மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளதாக சுகாதார மற்றும் போஷாக்குத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தப் போஷாக்கு மாதத்தில் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் போஷாக்கு நிலை பற்றிக் கவனம் செலுத்தப்படவுள்ளது என்று அமைச்சு தெரிவித்தது. (த)

# வெளிநாடுகளிலிருந்து தபாலகங்கள் மூலமாகவும் பணம் அனுப்ப வசதி

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தை இங்கிருப்போர் தபாலகங்கள் மூலமாகவும் பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்யப்படவிருக்கிறது.

தபால் தொலைத் தொடர்பு மற்றும் கிராமிய பொருளாதார ஊக்குவிப்பு அமைச்சர் டி.எம். ஜயரத்ன இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நடைமுறை அமுலுக்கு வரும் பட்சத்தில் மக்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

மிகவும் உபயோகமுள்ள தமிழ், ஆங்கில, இலக்கிய, இலக்கண, கதை, நாடக, கவிதை, சமய, சஞ்சிகை நூல்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 20, குரோசெற் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (49999)

# சங்கானை - கொடிகாமம் இடையிலான பஸ் சேவை சுன்னாகத்திலிருந்து ஆரம்பிப்பது குறித்து விசனம்

தென்மராட்சி,மே8

சங்கானையிலிருந்து கொடிகாமத்திற்கு தினமும் காலையில் புறப்படவேண்டிய 811 மார்க்க பஸ் சுன்னாகத்திலிருந்து சேவையினை ஆரம்பிப்பதால் தென்மராட்சி பிரதேசத்திற்கு வரும் அரச உத்தியோகத்தர் உட்பட பொது மக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

தினமும் காலையில் 7 மணிக்கு சங்கானையிலிருந்து புறப்படவேண்டிய இந்த பஸ், கோண்டாவில் டிப்போவிலிருந்து சுன்னாகத்திற்குச் சென்று அங்கிருந்து கொடிகாமத்திற்கு செல்வதால் இந்த பஸ்ஸை சங்கானை தொடக்கம் சுன்னாகம் வரையிலான வீதியில் நம்பி நிற்கும் பயணிகள் யாழ்ப்பாணம் சென்றே தென்மராட்சிக்குச் செல்லவேண்டியுள்ளது.

இதேவேளை - பி.ப. 3 மணிக்கு கொடிகாமத்திலிருந்து சங்கானைக்குச் செல்லும் பஸ் சிலவேளைகளில் சுன்னாகத்தில் நிறுத்தப்படுவதால், பயணிகள் வேறு வாகனங்கள் மூலம் தமது வீடுகளுக்குச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(117)

## உடன் வேலை வாய்ப்பு

காசாளர்
- 50 வயதுக்கு மேற்பட்டவர்

சமையல் ஆள் - 2
சமையல் உதவி ஆள் - 1
உணவு பரிமாறுபவர் - 2

தகுதிச் சான்றிதழுடன் நேரில் வரவும்.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.

**SKY LINE RESTAURANT**
198, Kasthuriyar Road,
Jaffna.

## அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### பதவி வெற்றிடம்

அரியாலை ப.தெ.வ.அ கூட்டுறவுச் சங்கத்தில் காசாளர் பணிநிலை(306-13)க்கு உடனடியாக நியமனம் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி - காசாளர்
குறியீட்டு இலக்கம் - 306-13
சம்பள அளவுத்திட்டம் - 4000/= - 5550/=
75x10, 80x10

இவற்றுடன் கூ.வே. ஆணைக்குழு சுற்று நிருபங்களுக்கமைவான சம்பள அதிகரிப்புகளும் (ரூபா 1250/=, ரூபா 2500/=) வழங்கப்படும்.

வயதெல்லை - 30 வருடங்களுக்கு மேற்படாதவர்கள்.

தகைமைகள்:

i. கூட்டுறவுச்சங்க ஊழியர் 14 ஆம் சம்பளத்திட்டப் பதவியொன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டறவுச்சங்க ஊழியர் 15ஆம் சம்பளத் திட்டப் பதவியொன்றில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ii. கூட்டுறவுச் சங்க ஊழியர் (சாதாரணதரம் பத்திரம்) சான்றிதழ்/க.பொ.த சாதாரணம் பரீட்சையில் கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் மற்றும் சிங்கள மொழி/ தமிழ் மொழி உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச் சங்கமொன்றில் காசாளர்/ விற்பனை அலுவல்கள் பற்றிய 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

iii. கணனி Microsoft Office அனுபவம் தொடர்பான அறிவினைப் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப படிவங்களை சங்க காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ எதிர்வரும் 20.05.2006 ஆம் திகதிக்கு முன்பாக

"பொது முகாமையாளர்
அரியாலை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
15, நடுத்தெரு லேன்
அரியாலை."

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (ஆண்பாலர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.)

பொது முகாமையாளர்.

(சி 49214)

# நீங்காத நினைவலைகள்

**முதலாம் ஆண்டு**



**அமரர் பஞ்சாட்சரம் ஸ்ரீதரன்**

மலர்வு 19-12-1954
உதிர்வு 19-04-2005

ஓர் ஆண்டு என்ன எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
துயர் எங்களுக்கு ஆறாது
அண்ணா!

தாய், சகோதரர்கள்

**23 ஆம் ஆண்டு**



**அமரர் வாலாம்பிகை பஞ்சாட்சரம்**

மலர்வு 08-11-1928
உதிர்வு 19-03-1983

எத்தனை ஆண்டுகள்
சென்றாலும் உங்கள்
நினைவுடன் வாழ்கின்றோம்
அப்பா!


மனைவி, பிள்ளைகள்.

கே.கே.எஸ்.வீதி,
இணுவில் மேற்கு.

(50058)

# 31ஆம் நிறைவு நாள் நினைப்பும் அழைப்பும்

## அமரர் வேலுப்பிள்ளை ஜீவரட்ணம் (சிவசாமி) அவர்கள்



உடல் போர்த்து வந்தது
22.03.1941

உடல் நீத்துச் சென்றது
08.04.2006

ஆயிரம் உறவுகள் வந்துவந்து கலைந்துசெல்லும்
ஆயினும் உங்களின் உறவொன்றே நிலைத்துநிற்கும்
காலையின் உதயத்தில் மதியத்தின் நேரத்தில்
மாலையின் மறைவினில் இராவரும் பொழுதினில்
உங்களின் நினைவன்றி உள்ளத்தில் வேறில்லை
எங்களின் வாழ்விங்கு குருக்குத்தி தானுண்மை.

இன்று (08.05.2006) திங்கட்கிழமை பகல் பதினொரு மணிக்கு அன்னாரின் முப்பத்தோராம் நிறைவுநாள் நினைவாக அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நாம் வழங்கும் பகல் உணவிலும் கலந்து எம்மை ஆறுதல்படுத்துமாறு உறவினரை - உற்றாரை - ஊராரை - நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

56/12, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் குமாரலிங்கம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குமாரலிங்கம் அவர்கள் நேற்று (07.05.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கணேஸ்வரியின் அன்புக் கணவரும் அமரர் கிரிஜா, ஸ்ரீதர், (Denshi photo, உசன்), அனுஷா, வனஜா (ஜேர்மனி), கீதா, குருபரன் (பிரான்ஸ்), பத்தரன் (mOuse) ஆகியோரின் தந்தையும் மஞ்சரி தேவி (கொழும்பு), சண்முகவடிவேல் (சரவணன் களஞ்சியம்), ஸ்ரீதரன் (ஜேர்மனி, இரகுநாதன் (பெற்றா எசன்ஸ்), துஷானந்தி ஆகியோரின் மாமனும் அமரர் சுப்பையா, அமரர் இராசதுரை, திருநாவுக்கரசு, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2006) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெற்று, காரைக்கால் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.K.S. Road, Inuvil. (50063) — தகவல்: குடும்பத்தினர்.

## சின்னையா கணேசமூர்த்தி

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சரவணை கிழக்கு மயிலப்புலத்தை வதிவிடமாகவும் கொண்டவரும், தற்போது இல.264, சில்வா வீதி வட்டக்கச்சியில் வசித்தவருமாகிய சின்னையா கணேசமூர்த்தி 07.05.2006 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய சின்னையா, பறுவதபத்தினி தம்பதியரின் அன்பு மகனும், நாகநாதி - இராசம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் (இந்திரா) அன்புக் கணவரும், காலஞ்சென்ற தர்மலீலா மற்றும் கமலலீலா (ஆசிரியை), யசோதா(ஜேர்மனி), கஜேந்திரன் (வரதா பான்ஸி, கிளிநொச்சி), காலஞ்சென்ற நந்தினி, தர்சினி (யாழ்), ஐங்கரன் (தமிழ்க் குமரன் அழகு மாடம், கிளிநொச்சி) சிறிகரன் (வவுனியா வளாகம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகானந்தம் (அனுரா ஹவுஸ், கொழும்பு), சிவகுமார் (ஜேர்மனி), திசோகுமார் (வளர்மதி மோட்டோர்ஸ், யாழ்.) ஆகியோரின் அன்பு மாமனும், வர்சினி(ஜேர்மனி), வக்சனா(யாழ்), ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, ஆச்சிமுத்து, அன்னம்மா, ஏகாம்பரம் மற்றும் திருமேனி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கார்த்திகேசு, தியாகராசா மற்றும் நாகராசா பத்மநாதன், அன்னபூரணி, பரமானந்தசிவம், காலஞ்சென்ற அருளானந்தன் மற்றும் வரதராஜன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.05.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மம்மில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*264, சில்வா வீதி, வட்டக்கச்சி.* — தகவல்: குடும்பத்தினர்


**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்

மனிதக் குரங்கொன்றின் நெஞ்சை உருக்கும் கதை கொண்ட சாகசச் சித்திரம்

பீட்டர் றிட்சஸ்சனின்

**கிங் - கொங் King Kong**

தங்கத் தமிழ் மொழியில்

[பாடசாலை மாணவர்களுக்கு விசேட சலுகை]

காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30

**ராஜா** யாழ்ப்பாணம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு

பரத், மல்லிகா கபூர் நடித்த

அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது

10.30, 2.30, 6.30, 9.30 முற்பதிவு செய்துகொள்ளலாம்

**நாகம்ஸ்** சுன்னாகம்

எஸ்.ஜே.சூரியா, நயன்தாரா மற்றும் பலர் நடித்த

**கள்வனின் காதலி**

காட்சி நேரம் : 10.30, 2.30, 5.30


# நெடுந்தீவுப் பிரதேசசபை சமர்ப்பித்த வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

நல்லூர்,மே8

2006ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப் படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டின்கீழ் நெடுந்தீவு பிரதேச சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த அமுலாக்கல் நிகழ்ச்சித் திட்ட மதிப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதேச சபையின் செயலாளர் எஸ்.தில்லைநாதன் தெரிவித்தார். இதன்ப

- மரக்கறிச் சந்தைக்கு ரூபா ஒருலட்சத்து 25 ஆயிரமும் -
- அலுவலக கட்டட வேலைகளுக்கென ரூபா ஒருலட்சத்து 50 ஆயிரமும் -
- நூலக புத்தகங்கள் கொள்வனவுக்கு ரூபா 25 ஆயிரமும் -
- கிழக்கு சனசமூக நிலைய விஸ்தரிப்புக்கு ரூபா 50 ஆயிரமும்-
- கலாசார மண்டபத்திற்கு ரூபா 4லட்சமும் -
- கிழக்குப் பகுதிக்கான மின் விநியோக விஸ்தரிப்புக்கு ரூபா 2 லட்சமும் -
- மத்தி. கிழக்குப் பகுதிக்கான மின்சார விஸ்தரிப்புக்கு ரூபா 2 லட்சத்து50 ஆயிரமும் -
- நெடுந்தீவு மின்சார நிலைய விநியோக மலசலகூட விஸ்தரிப்புக்கு 50 ஆயிரமும் -
- கடந்த வருட கொடுப்பனவு வேலைகளுக்கு ரூபா 2 லட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபாவும் - ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபையின் செயலாளர் எஸ். தில்லைநாதன் தெரிவித்தார்.(111)


சீட்டிழுப்பு இல. 1707

06.05.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் — சுப்பர் எண்

01 09 37 42 (14)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301061329 இலிருந்து 301076236

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 48,85,850/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 48,85,850/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 22 | 5,000/- | 1,10,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 396 | 1,000/- | 3,96,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,302 | 500/- | 6,51,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 18,933 | 40/- | 7,57,320/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 17,846 | 20/- | 3,56,920/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,69,991 | * 10/- | 26,99,910/- |
| மொத்தம் | | | 69,71,150/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,08,497 | | 75,71,150/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 56,06,750/-

| | |
|---|---|
| கேகாலை | 301064895-4-84 |
| காலி | 301064952-2-37 |
| மாத்தளை | 301067449-3-28 |
| குருநாகல் | 301068567-5-00 |
| இரத்தினபுரி | 301073866-3-01 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

அபிவிருத்தி அதிர்ஷ்டம் உத்தியோகபூர்வ முடிவுகள்

777 சிவப்பு

மிதுனம்

05-05-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5149945-5163695

வெற்றி இலக்கங்கள் 07 33 35 51

ஜக்பொட் பரிசு ரூபா 23,36,200/- வெல்லப்பட்டுள்ளது

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 90,39,370/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,00,528 | 10/- | 30,05,280/- |
| 2 இலக்கங்கள் | 27,624 | 20/- | 5,52,480/- |
| 1 இல+லக்கினம் | 27,382 | 30/- | 8,21,460/- |
| 2 இல+லக்கினம் | 2,512 | 100/- | 2,51,200/- |
| 3 இலக்கங்கள் | 721 | 500/- | 3,60,500/- |
| 3 இல+லக்கினம் | 72 | 5,000/- | 3,60,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 1,00,000/- | 3,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 23,36,200/- | 23,36,200/- |
| மொத்தம் | | | 79,87,120/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,58,848 | | 90,39,370/- |

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 10,00,000/-

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 5156729-2-47 |
| குருநாகல் | 5153725-8-83 |
| காலி | 5151069-5-22 |
| கேகாலை | 5153235-1-50 |
| திருகோணமலை | 5152516-4-69 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03


# அழைப்புக் கட்டளை

*இல, 16 பிரிவு 55 (1)*

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றத்தில்

சுந்தரலிங்கம் பெண் மஞ்சுளா
நவக்கிரி புத்தூர்மேற்கு, புத்தூர் — வழக்காளி

வழக்கு இல, மணநீக்கம் 665 — எதிர்

வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம்
நவக்கிரி, புத்தூர் மேற்கு, புத்தூர்.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி

எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

**உங்களிடம் இருந்து மணவிலக்கு பெறுவதற்கு**

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 18 ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றில் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன்முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்ட முறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப் படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
து.சிறீமோகன்
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு கூப்பிடும் திகதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்
கையொப்பம், பதிவாளர்

2006ஆம் ஆண்டு வைகாசி மாதம் 03 ஆந் நாளாகிய இன்று

வரைவு சி.வீரகத்திப்பிள்ளை, வழக்காளி சட்டத்தரணி (50059)

# மரண அறிவித்தல்கள்

## *சரவணமுத்து உதயகுமார்*

*(சின்னத்தம்பி)*



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் சுவிஸை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து உதயகுமார் நேற்றுமுன்தினம் (06.05.2006) சனிக்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும் கிருஸ்ணமாலா (ரூபி - சுவிஸ்)வின் அன்புக் கணவனும் சுதந்திரராசா - கமலோஜினி தம்பதியரின் மருமகனும் சபிதா, லபிஷா (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் புஸ்பமலர், தர்மராசா (சுவிஸ்), கலைமகள், உதயகுமாரி (சுவிஸ்), ரதிகுமாரி (சுவிஸ்), வசந்தகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற செல்வராசா மற்றும் பராசக்தி (சுவிஸ்), குகநேசன், குருமூர்த்தி (சுவிஸ்), சுந்தரலிங்கம் (சுவிஸ்), விக்பிரவாசன் (சுவிஸ்), புஸ்பமாலா, றஞ்சினி, சுதர்சன் ஆகியோரின் மைத்துனரும் குகநாதன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10.05.2006 புதன்கிழமை சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை கிழக்கு, அரசடி, மானிப்பாய்* (50062) — தகவல்: பா.குகநேசன் (கோணேஸ்)

## *திருமதி டாக்டர் ஜி.ஜோர்ஜ் ஞானமலர்*

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் திருமதி டாக்டர் ஜி.ஜோர்ஜ் ஞானமலர் நேற்று (07-05-2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை கத்தறீனா தம்பதியரின் அன்பு மகளும், கபிரியேல் - ஆரோக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் வைத்தியகலாநிதி ஜீ.ஜோர்ஜ் அவர்களின் அன்பு மனைவியும் வி.எலிசபேத் சாள்ஸ் ஞானேஸ்வரன் (பிரான்ஸ்), அன்று ஞானேஸ்வரன் (பிரான்ஸ்), செ.அக்னஸ் ஞானேஸ்வரி (பிரான்ஸ்), ஆஞ்சலோ ஞானேஸ்வரன் (கனடா), ம.ஆன் ஞானேஸ்வரி (திருமலை), பிலிப் ஞானேஸ்வரன் (கபிரியேல் ஜோர்ஜ் வைத்தியசாலை சுன்னாகம்) ஆகியோரின் அன்பு தாயும், வில்லியம், சாள்ஸ் இம்மாகுலேற் (பிரான்ஸ்), டெனிஸ் (பிரான்ஸ்), மத்தியூஸ் (ஆளுநர், செயலகம் வ.கி.மா.திருமலை), அன்று லெற்றீசியாராணி (பிரான்ஸ்), ஆஞ்சலோ கிறிஸ்ரின் றோஸ் (சட்டக்கல்வித்துறை, கொழும்பு பல்கலைக்கழகம்), பிலிப் ஆன் மேரி (சித்தமருத்துவதுறை யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியும் ரூபன், தீபன், நீகன், கபிரியேல் எட்வேக், கத்தறீன், அனைஸ், புளோறன்ஸ், கிறிஸ்ரின், ஜோஜின், இயூஜின், யூலியன், லிகோறி, கறோன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற அருளானந்தம், மாக்கிறட் மற்றும் வெலிச்சோர், மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அமலஉற்பவம் மற்றும் டாக்டர் ஜி.எட்வேட், பாவிலுப்பிள்ளை லில்லிறோய் ஆகியோரின் மைத்துனியும் அருட்திரு. அல்றின் (O.M.I), அருட்திரு.அற்புதராஜா (O.M.I) ஆகியோரின் சிறியதாயும் அருட்திரு. ஜெறோம் (O.M.I), அருட்சகோதரர் கிறிஸ்ரி நிர்மலறாஜன் (O.M.I), அருட் திரு றொபின்சன், அருட்சகோதரி விமலின் (A.C) அவர்களின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (08.05.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்று, பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மரியவாசம், Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். 0212225684* (50062) — தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. ஆதரவாளர் வெட்டிக் கொலை! ஆனமடுவவில் சம்பவம்

கொழும்பு,மே8

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவர் புத்தளம், ஆனமடுவ பகுதியில் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நிமல் ஜயரட்ண (32வயது) என்பவரே கொல்லப்பட்டவர் என ஆனமடுவ பொலீஸார் தெரிவித்தனர்.

இரு வருடங்களுக்கு முன்னர் கொலை வழக்கு ஒன்றில் குற்றவாளியாகக் காணப்பட்ட இவர், இருவருட சிறைத்தண்டனை அனுபவித்த பின்னர் சில தினங்களுக்கு முன்னரே நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

நேற்றுமுன்தினம் மஹாகும்புக்கடவல என்றும் பகுதியில் இவர் வந்து கொண்டிருந்தபோது பின்னால் வந்த லொறியொன்று இவர் மீது வேகமாக மோதியது என்றும் -

தூக்கி வீசப்பட்டு வீதியில் வீழ்ந்த நிமல் ஜயரட்ணவைக் கொலையாளிகள் வாளால் வெட்டிக்கொன்றனர் என்றும் - பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆனமடுவ பொலீஸார் சந்கேநபர்கள் இருவரைக் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழகம் மற்றும் புதுவையில் இன்று சட்டசபைத் தேர்தல் வாக்களிப்பு

இந்தியாவில் தமிழகத்தின் 234 சட்டசபைத் தொகுதிகளுக்கும் புதுவை யூனியன் பிரதேச சட்டசபையின் 27 தொகுதிகளுக்கும் இன்று வாக்குப் பதிவு நடக்கவுள்ளது.

இம்முறை தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு வரலாறு காணாத அளவு பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

வாக்குப் பதிவு காலை 7 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறுகிறது. ஆட்சியைப் பிடிக்க அ.தி.மு.க., தி.மு.க. கூட்டணிக் கட்சிகளோடு நடிகர் விஜயகாந்தின் தே.மு.தி.க., பா.ஜ.க. ஜனதா தளம் ஆகிய கட்சியினர் போட்டியிடுகின்றனர். தமிழகத்தின் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 2ஆயிரத்து 576 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர் களில் 160 பெண்கள் உட்பட ஆயிரத்து 222 சுயேச்சை வேட்பாளர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் வகையில் தேர்தல் நடைபெறுகிறது.

அனைத்துத் தொகுதிகளிலும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் மூலம் வாக்குப் பதிவு நடைபெறுகிறது. (22)

# பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை மேலும் தனியார்மயப்படுத்த அரசு முடிவு

கொழும்பு,மே8

ஸ்ரீ லங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை மேலும் தனியார் மயப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அதனடிப்படையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மேலும் பலவற்றை தனியாருக்கு விற்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார்மயப்படுத்தும் விவகாரம் மீண்டும் சூடு பிடித்துள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் தற்போதுள்ள நிரப்பு நிலையங்களில் 100 நிலையங்களே இவ்வாறு விற்பனை செய்யப்படவுள்ளன. அரச நிதியுதவியுடன் இயங்கும் தனியார் நிறுவனங்களுக்கு இவற்றை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக பெற்றோலியப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தெரிவித்தார். நேற்று முன்தினம் சனிக்கிழமை இது தொடர்பான பேச்சுகள் நடைபெற்றுள்ளன.

ஏற்கனவே பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் 40 வீதத்திற்கும் மேற்பட்ட பங்குகள் இந்தியன் ஒயில் கூட்டுறவு நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளது. இந் நிலையில் எஞ்சியவற்றையும் அந்த நிறுவனம் பெற்றுக்கொள்ளாமல் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சியின் போது இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடும் எதிர்ப்புக் காரணமாக அது நிறைவேறவில்லை. அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலின் போது அந்த முயற்சி கைவிடப்படும் என்று இப்போதைய ஜனாதிபதி தனது 'மஹிந்த சிந்தனை'யில் தெரிவித்திருந்தார். ஆனால் அதற்கு மாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம)

# வவுணதீவில் ஷெல் தாக்குதல்!

மட்டக்களப்பு,மே.8

மட்டக்களப்பு மாவட்டம், வவுணதீவில் மக்கள் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் நேற்று எறிகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்பதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக்காலை ஆறு மணியளவில் ஆரம்பித்த இந்த தாக்குதல்கள் சுமார் அரைமணி நேரம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலை வரை பவள கவச வாகனத்திலிருந்து சுவாமிமலை பகுதியை நோக்கி எறிகணை தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்து உடனடியாக தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (ம)

## அகாஷி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டை அந்தக் கூட்டத்தில் வைத்து ஏனைய நாடுகளுக்கு எடுத்து விளக்க அகாஷி இந்த விஜயத்தைப் பயன்படுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தனது கொழும்பு விஜயத்தை முடித்துக் கொண்டு அகாஷி நேரே இந்தியா செல்லவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)(22)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் உருவாகி இருக்கும் மோசமான கள நிலை பற்றி கூட்டமைப்பு எம்.பிக்கள் அகாஷியோடு விரிவாகக் கலந்துரையாடினார்.

வடக்கிலும் கிழக்கிலும் குறிப்பாக திருமலையில் இடம்பெற்ற இனக்கலவரங்கள், இனப்படுகொலைகள் பற்றியும் அகாஷிக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

திருகோணமலை, புத்தூர், கரவெட்டி ஆகிய இடங்களில் அப்பாவித் தமிழர்கள் படையினரால் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களும் அகாஷியின் கவனத்துக்குச் சுட்டிக்காட்டப்பட்டன.

'உதயன் - சஞ்சீவி' பத்திரிகைப் பணிமனை மீது கடந்த செவ்வாயன்று நடத்தப்பட்ட கொடூரத் தாக்குதல், அதன் பின்னணி என்பன குறித்தும் அகாஷிக்கு கூட்டமைப்பு எம்.பிக்கள் விளக்கமளித்தனர். (ஐ)(22)

## திருநெல்வேலியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் உள்ள மதுபான விற்பனை நிலையம் ஒன்றில் மதுபானங்களை கொள்வனவு செய்துவிட்டு வீடு திரும்பப் புறப்பட்ட சமயம் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந் தார்.

இந்த இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கு யாழ்.மாவட்ட எல்லாளன் படை ஊடக அறிக்கை மூலம் உரிமை கோரியுள்ளது.

அந்த அறிக்கையில், எதிரிகளோடும் எதிரியின் புலனாய்வாளர்களோடும் தமிழ் இனத் துரோகிகளோடும் இணைந்து செயற்பட்ட பிரஸ்தாப இளைஞருக்கு பலமுறை எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும் அதனை மீறிச்செயற்பட்டதால் திருநெல்வேலியில் வைத்து அவருக்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)(22)

## புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர், ஜெனீவா பேச்சுகளின் பின்னர் இடம்பெற்ற வன்முறைகளை விலாவாரியாக விளக்கியுள்ளார்.

அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதாக இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் விட்டுக்கொடுப்புடன் செயற்படவேண்டுமென இங்கு வலியுறுத்திய யசூசி அகாஷி நாளை கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்திக்கும்போது இதனை வலியுறுத்திக் கூறப்போவதாகச் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள ஜப்பானியத் தூதுவரும் இந்தச் சந்திப்பில் கொண்டார். (5)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மர்மமான முறையில் காணாமற்போன சம்பவத்தை அடுத்து உருவாகி இருக்கும் மக்கள் கொந்தளிப்பை அடக்குவதற்காகவே அவசர அவசரமாக ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருப்ப தாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

காணாமற்போன இளைஞர்கள் எண்மரும் கொல்லப்பட்டு அவர்களது சடலங்கள் எங்கோ மறைக்கப்பட்டுவிட்டன எனச் சந்தேகிக்கும் அப்பிரதேச மக்கள் கொதிப்படைந்து நேற்று முழுவதும் சடலங்களைத் தேடித் திரிந்தனர்.

ஆலயச் சூழலில் வைத்து சுட்டு அல்லது வெட்டிக் கொலை செய்யப்பட்ட பின் இவர்கள் எண்மரினதும் சடலங்கள் தென்மராட்சியையும் வடமராட்சியையும் இணைக்கும் எல்லையில் உள்ள கப்பூது வெளிப் பகுதியில் - பற்றைக் காட்டில் - மறைக்கப்பட்டிருக்கின்றன என்று மக்கள் மத்தியில் தகவல் பரவியது. அதனால் அங்கும் தேடுதல் நடத்த மக்கள் முற்பட்டனர் என்று கூறப்படுகிறது.

தென்மராட்சி - வடமராட்சி எல்லைப் பிரதேச மக்கள் மத்தியில் உருவாக்கிய கொந்தளிப்பு நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தப் பகுதியில் நேற்று மாலை படையினர் பெருமளவில் குவிக்கப்பட்டனர்.

மக்களின் கொந்தளிப்பு எல்லை மீறுவதைத் தடுப்பதற்காகவே யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் - பாதுகாப்பு அமைச்சின் உத்தரவுக்கு அமைய - ஊரடங்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது என்று இணையத் தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஊரடங்கு அமுல் செய்யப்படுவது பற்றிய அறிவித்தல் மந்துவில், வரணி,கொடிகாமம் உட்பட வடமராட்சியையும் தென்மராட்சியையும் பிரிக்கும் எல்லைப் பிரதேச கிராமங்களில் நேற்று முன்னிரவு ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டது என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஐ)(22)

## ஆலயத்தில் தங்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீரணி கேலத்தம்மன் கோயிலில் தங்கியிருந்த சமயமே இளைஞர்கள் எட்டுப்பேரும் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்று வருகின்றது. அதன் பொருட்டு இளைஞர்கள் அங்கு தங்கியிருந்தனர். அவர்களில் ஆசிரியர் ஒருவரும் ஆலய அறங்காவல் சபைச் செயலாளரும் நான்கு மாணவர்களும் அடங்குவர்.

இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டிருக்கக் கூடும் என்று அஞ்சப்படுகின்றது. அவர்களின் ஆடைகளின் பாகங்கள் ஆலயத்தின் அருகில் இருந்த பற்றைகளுக்குள் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. மூன்று அடையாள அட்டைகள் இரத்தம் தோய்ந்த நிலையில் ஆலய வளாகத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தில் இருந்து தேர்முட்டி வரையான பிரதேசத்தில் இரத்தத் தடம் காணப்படுகின்றது. எனினும் அதன் மேல் மண் போட்டு மூடப்பட்டுள்ளதுடன் அருகில் சப்பாத்துக் காலடையாளங்களும் காணப்படுகின்றன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆலயப் பகுதிக்கு வழமையாக இரவு 7.00 மணியளவில் இராணுவத்தினர் வந்து செல்வது வழமை என்று கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர். ஆலய கும்பாபிஷேகத்தை ஒட்டி இராணுவத்தினர் மிக விழிப்புடன் இருந்தனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு வழமைக்கு மாறாக 10.00 மணியளவிலேயே இராணுவத்தினர் ஆலயப் பகுதிக்கு ரோந்து வந்துள்ளனர். அதேசமயம் நள்ளிரவு 1.10 மணியளவில் சுமார் 8 துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைத் தாங்கள் கேட்டனர் என்று கிராமவாசிகள் கூறுகின்றனர். அதற்கு 10 நிமிடங்கள் முன்ன தாக - இரவு 1.00 மணியளவில் - இராணுவ வாகனம் ஒன்றின் சத்தத்தையும் கேட்கக் கூடிய தாக இருந்தது என்றும் அவர்கள் தெரிவித் தனர்.

அதிகாலை 4.00 மணியளவில் மீண்டும் இராணுவ வாகனம் மற்றும் பவள் கவச வாகனம் ஆகியவற்றின் சத்தத்தைக் தாம் கேட்டனர் என்றும் -

இது வழமைக்கு மாறான சத்தமாக இருந்தது என்றும் -

அவர்கள் மேலும் கூறினர். ஆலயப் பகுதியை நோக்கிச் சென்ற அந்த வாகனம் மற்றும் பவள் கவச வாகனம் என்பன சுமார் 30 நிமிடங்கள் அங்கு தங்கிநின்றன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆலய முகாமைத்துவச் சபை செயலாளர் இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி (வயது 35 - ஆசிரியர், வரணி அ.த.க. பாடசாலை), சபை உறுப்பினர் மார்க்கண்டு புஷ்பகாந்தன் (வயது 26), கந்தசாமி பரிமேலழகன் (வயது 29), இராமச்சந்திரன் இராசகுமார் (வயது 24), பொன்னம்பலம் பார்தீபன் (வயது 22), வைகுந்தவாசன் வைகுந்தகுமார் (வயது 22), செல்வரத்தினம் சிவானந்தன் (வயது 22), ரட்ணம் தயாரூபன் (வயது 22) ஆகியோரே கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

இளைஞர்கள் காணாமல்போனமை பற்றியும் ஆலயப் பகுதியில் இரத்தக் கறைகள் காணப்பட்டமை பற்றியும் சாவகச்சேரிப் பொலீஸாருக்கு முறையிடப்பட்டுள்ளது. (ஐ-ம)

# மரண அறிவித்தல்

## திருமதி பத்மாவதி நடேசபிள்ளை



திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு ஆகிய இடங்களில் வசித்தவருமாகிய திருமதி பத்மாவதி நடேசபிள்ளை கடந்த சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் சிங்கர் கம்பனி முன்னாள் பிராந்திய முகாமையாளரும், திருகோணமலை செவன் ஐலண்ட் ஹோட்டல் அன்ட் பார்க்கின் முன்னாள் முகாமையாளருமான காலஞ்சென்ற செல்லையா நடேசபிள்ளையின் அன்பு மனைவியும், திருகோணமலை, முன்னாள் பிராந்தியக் கடற்படை ஓவசியர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - காலஞ்சென்ற மரகதமாணிக்கம் தம்பதியரின் மகளும், சுரேந்திரநாதன், காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், யோகராஜா மற்றும் நாகேஸ்வரி, தர்மராஜா(திருகோணமலை), கமலேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், திருமதி பாலாம்பிகை சிவசுப்பிரமணியத்தின் (லண்டன்) மைத்துனியும், காலஞ்சென்ற சிறிதரன்(கணக்காளர்) மற்றும் சபதரன் (பொறியியலாளர் - கனடா), வித்தியாதரன் (ஆசிரியர் - 'உதயன்'-'சுடர்ஒளி' நாளிதழ்கள்), திருமதி யசோதை சரவணபவன், சசிதரன் (டென்மார்க்), ரவிதரன் (கொழும்பு), துளசிதரன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும், சரவணபவன் (நிர்வாக இயக்குநர் -'உதயன்', 'சுடர்ஒளி' நாளிதழ்கள் மற்றும் லஷ்மி குரூப் நிறுவனங்கள்), செல்வகலா (லண்டன்), அமிழ்தினி (கனடா), இரட்ணகலா, உருத்திராங்கனி (டென்மார்க்), உமா சுகிர்தா(ஆசிரியை, கொழும்பு சர்வதேச பாடசாலை), தாரிணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவை, சிவகாமி, சிவப்பிரியா, சிவராம், லஷ்மி, விஜயசாயி, வைஷ்ணவி, வித்தியசாயி, அபிராமி, சிவானி, ஜயந்த் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 70, டேவிட்சன் வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு-4 இல் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் பிற்பகல் 4.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொறளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

70, டேவிட்சன் வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு-4
தொலைபேசி : 2503991, 2591953

*தகவல்:*
பிள்ளைகள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.05.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*